Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25**%**
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Aug 11 : 485 Nos.
  - Up to Jul 11 : 481 Nos.
- **Performance Aug. ‘11 ...**
  - Turnover growth : 10.29%
  - Employment growth : 1.12%
  - 100% Attendance : 17.61%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

Hydro Gen Go Green – HHO Generators

Titanictrade We deliver value chain – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




## ஆண்டவன் ஆணை

நான் ஏழை எளிய மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டுமென்பது இறைவிருப்பம் என்கிற அன்னை தெரசா மனிதகுல சேவைக்காக தன்னை முழுமையாக அர்பணித்து கொள்ள தூண்டுதலாக இருந்தது எது என்பதை கூறுகிறார். அந்த புதிய பாடத்தை நான் இன்று கற்று கொள்ள முடிந்தது.

ஏழ்மையின் கொடுமையை அனுபவபூர்வமாக புரிந்து கொண்டேன். கால்வலிக்க நடந்தேன். பசியை தீர்க்க சிறிது உணவிற்காக ஏழை மக்கள் ஏங்கி தவித்து தேடி அலையும்போது அவர்கள் எவ்வளவு வெறுப்பும் வேதனையும் அடைந்திருப்பர் என்பதை நேரில் அறிந்து கொண்டேன். அனாதையாக விடப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள் இவர்களின் கண்களில் தான் உண்மையான தெய்வ தோற்றத்தை காண முடியும். தெரு ஓரங்களில், பசியினாலும், நோயினாலும் விழுந்து கிடப்பவர்கள் தான் என் சகோதர சகோதரிகள். ஒடுக்கப்பட்டவனும், தெருவில் ஆதரவற்று இறந்து கிடப்பவனும், தொழுநோயினால் மனம் நொந்து உள்ளம் வெதும்புபவனும் நானே என்னும் இறைவனின் குரல் என் இதயக் கடலில் அலைகள் போல் ஒலிக்கின்றன.

இறைவனே என் இலட்சிய பாதைக்கு என்னை அழைத்து செல்லும் சொகுசும் சுகமும் நிறைந்த வாழ்க்கை என்னை அசைக்க முடியாது. இறைவனே! அனைவருக்கும் சேவை செய்யும் பலத்தை எனக்குத்தாரும் என்று வேண்டிக் கொண்டார் அன்னை தெரசா இன்றைக்கு நாம் எப்படி வாழ்கிறோம்? கஷ்டபடுகிறவர்களுக்கும் தேவையிலிருப்போருக்கும் நமக்கு உதவி செய்ய திறன் இருக்கும்போது உதவுபவர்களாக இருக்கிறோமா? இல்லை எனக்கு என்று எல்லாவற்றையும் நமக்காகவே சேர்த்து கொள்கிறவர்களாக இருக்கின்றோமா என்பதை யோசித்து பார்ப்போம். ஆகவே நல்மனதோடு கஷ்டபடுகிறவர்களுக்கும், கண்ணீரில் தவிப்போருக்கும் உதவி செய்யுங்கள். அதற்குரிய பலனை இறைவன் நிச்சயமாக உங்களுக்கு அருளுவார்.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## Reality of Fear

You’re not scared of the dark,
You’re scared of what in it.
You’re not afraid of heights,
You’re afraid of falling.
You’re not afraid of the people around you,
You’re just afraid of rejection.
You’re not afraid of love,
You’re just afraid of not being loved back,
You’re not afraid to let go
You’re just afraid to accept the reality that he’s gone
You’re not afraid to try again,
You’re just afraid of getting hurt for the same reason

Compiled by : Mr. S. Siva Deepan
Facilitation

## FUNCTIONAL WISHES




Gandhi Jayanthi
2nd October



Saraswathi pooja
5th October




Deepavali
26th October

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel:22294565<br>Jeya Clinic,<br>Tel: 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே!

**Mrs. Jayanthi. R** Oct 10
Purchase



**Mr. Venkatesan. K** Oct 11
Fib-Tech

**Mrs. Easwari. K** Oct 21
Coating

**Mr. Martin Richard. R** Oct 31
Fib-Tech

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு பணக்காரர் ரயிலில் முதல் வகுப்பில் பயணம் புரிந்து கொண்டிருந்தார். எதிர் இருக்கையில் ஒரு முதியவர், கிழிந்த உடைகளுடன் மிகப்பணிவாய் அமர்ந்திருந்தார் "இந்த, ஆள் எப்படி முதல் வகுப்பில்" என்று அலட்சியமாகப் பார்த்த பணக்காரர், அவரைத் தனக்கு சின்னச் சின்ன வேலைகள் செய்ய ஏவியதோடு மிகவும் கீழ்த்தரமாக நடத்தினார்.

ஊர் வந்தது. ரயில் நிலையத்தில் பல முக்கிய மனிதர்கள் திரண்டிருந்து, அந்த முதியவரை மாலையிட்டு வரவேற்றார்கள். அவர் ஒரு பெரிய ஞானி என்பது இந்தப் பணக்காரருக்குத் தெரிய வந்தது. பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். அந்த முதியவர் சொன்னார், "உனக்கான மன்னிப்பை நான் தர மாட்டேன். நீ சந்திக்கும் ஒவ்வோர் ஏழை முதியவரிடமிருந்தும் அதைக்கேட்டுப் பெற்றுக்கொள்".

ஒரு ஞானியை ஏழையாகப் பார்த்த செல்வந்தர், அதற்குப் பிறகு ஒவ்வொரு ஏழையையும் ஞானியாகப் பார்க்கத் தொடங்கினார்.

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## Value of Relationship …

A man came home from work late, tired and irritated, to find his 5-year old son waiting for him at the door.

**SON**:"Daddy, may I ask you a question?"

**DAD**:"Yeah sure, what is it?" replied the man.

**SON**:"Daddy, how much do you make an hour?"

**DAD**:"That's none of your business. Why do you ask such a thing?" said angrily.

**SON**:"I just want to know. Please tell me, how much do you make an hour?"

**DAD**:"If you must know, I make Rs.100 an hour."

**SON**:"Oh," the little boy replied, with his head down.

**SON**:"Daddy, may I please borrow Rs.50?"

The father was furious, "If the only reason you asked that is so you can borrow some money to buy a silly toy or some other nonsense, then you march yourself straight to your room and go to bed. Think about why you are being so selfish. I work hard everyday for such this childish behavior."

The little boy quietly went to his room and shut the door. The man sat down and started to get even angrier about the little boy's questions. How dare he ask such questions only to get some money?

After about an hour or so, the man had calmed down, and started to think: Maybe there was something he really needed to buy with that Rs.50 and he really didn't ask for money very often. The man went to the door of the little boy's room and opened the door.

"Are you asleep, son?" He asked.

"No daddy, I'm awake," replied the boy.

"I've been thinking, maybe I was too hard on you earlier" said the man.

"It's been a long day and I took out my aggravation on you.. Here's the Rs.50 you asked for." The little boy sat straight up, smiling. "Oh, thank you daddy!" He yelled. Then, reaching under his pillow he pulled out some crumpled up bills. The man saw that the boy already had money, started to get angry again. The little boy slowly counted out his money, and then looked up at his father.

"Why do you want more money if you already have some?" the father grumbled.

"Because I didn't have enough, but now I do," the little boy replied.

"Daddy, I have Rs.100 now. Can I buy an hour of your time?

Please come home early tomorrow. I would like to have dinner with you."

The father was crushed. He put his arms around his little son, and he begged for his forgiveness.

It's just a short reminder to all of you working so hard in life. We should not let time slip through our fingers without having spent some time with those who really matter to us, those close to our hearts.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### மனித உடல்கள் பற்றிய அபூர்வ தகவல்கள்

1. மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.
2. ஒரு மனிதனின் உடலில் உள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டராகும்.
3. நமது ரத்தம் ஒரு நாளில் 30 கோடி கி.மீ பயணம் செய்கிறது.
4. நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறைகள் சுவாசத்தை உள்ளெடுத்து வெளிச்செலுத்துகிறது.
5. நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.
6. மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம்.
7. உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்.
8. கைரேகையை போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
9. கண் தானத்தில் கருப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்கு பொருத்தப்படுகின்றன.
10. 900 பென்சில்களை தயாரிக்கும் அளவிற்கு மனித உடலில் கார்பன் சத்து இருக்கிறது.

Compiled by : Mrs. M. Shahin
Marketing

## Appreciation from Well-wishers

UCO BANK

Thank you, Tiaano!

We,the staff members of UCO Bank, took part in the 9TH STAFF DAY CELEBRATIONS arranged bye you last sunday. All of us marveled at the meticulous pre-plan arrangement behind the grand celebration day.

Ita was heartening to see the family members of your staff coming with their kids and joining in groups in stage.

We all felt the personal attention padi by your staff.

We thank you once again!

A.V.RAMAN
MANAGER PFM.No.22871

TELEGRAM
BHARAT SANCHAR NIGAM LIMITED
(A Government of India Enterprise)
TELEGRAPH OFFICE. BSNL-CTO-CHENNAI1

Dear Tiaano

WISHING THE FUNCTION EVERY SUCCESS

S SRIDHARAN
MANAGING DIRECTOR
HI ENERGY BATTERIES MATHUR

## புதுக் கடவுள்

கடவுள் எல்லாவற்றையும் சரியாகச் செய்வதில்லை என்ற கருத்து ஒருவனுக்குத் தோன்றியது.

'நான் கடவுளாக இருந்தால் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்வேன், ஒவ்வொருவரின் வேண்டுதலையும் நன்றாக நிறைவேற்றுவேன், எல்லாச் செயல்களையும் சிறப்பாகச் செய்வேன்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் அவன்.

'அப்படியா? இந்தக் கணம் முதல் நீ தான் கடவுள்' என்று ஒரு குரல் கேட்டது. அவன் மிகவும் மகிழ்ந்தான்.

'கடவுளே! என் காய்கறித் தோட்டம் வாடி விட்டது மழை பெய்தால் நல்லது' என்று அவன் பக்கத்து வீட்டு விவசாயியின் குரல் கேட்டது. 'மழை பெய்யட்டும்' என்றான் புதுக்கடவுள். உடனே மழை பெய்தது. விவசாயி மனம் மகிழ்ந்தான். 'அய்யோ! கடவுளே என் சட்டி பானைகளை இப்போது தானே சூளையில் அடுக்கி நெருப்பு வைத்தேன் எல்லாம் அழிந்தனவே' என்று அழுதான் எதிர் வீட்டுக் குயவன். புதுக்கடவுளுக்கு அறிவுத் தெளிவு ஏற்பட்டது.

'கடவுளே! எனக்கு இந்தப் பதவி வேண்டாம் எனக்குப் புத்தி வந்துவிட்டது' என்று உரக்கக் கத்தினான் அவன். எல்லோரையும் மன நிரைவடையச் செய்ய முடியாது அதை முயல்பவர்கள் தோல்வி அடைவார்கள் அதற்காக யாருக்கும் உதவாமலும் இருக்கக் கூடாது.

Compiled by : Mr. Kumar
Design

## நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி III)

### காணோம்!

இந்தக் கேள்விகளெல்லாம் அப்போது நமக்குத் தோன்றவில்லை, இப்போதாவது அவற்றைப்பற்றிக் கொஞ்சம் நிதானமாக யோசிப்போம். அப்போதுதான், 'எடுத்ததை எடுத்த இடத்தில் வை! ஏன்கிற முக்கியமான கட்டளையின் அர்த்தமும் பயனும் நமக்குப் புரியும்.

ஓர் உதாரணத்துக்காக, அண்ணாச்சி கடையில் அந்தப்பையன் இல்லை என்று வைத்துக்கொள்வோம். அவனுக்குப் பதிலாக, உங்களையும் என்னையும் வேலைக்குச் சேர்த்திருக்கிறார்கள். யாரோ ஒருவர் வந்து, 'பயோரியா பல்பொடி வேணும்!' என்று கேட்கிறார்.

எதையும் அதற்குரிய இடத்தில் திரும்ப வைத்துப் பழக்கமில்லாத நமக்கு, பயோரியா பல்பொடி எங்கே என்று உடனே தெரியுமா? போதாத வெளிச்சத்தில், அந்தக் கடையில் ஒவ்வொரு ஷெல்ஃபாகத் தேர்ந்தெடுத்து, இண்டு இடுக்குகளிலெல்லாம் டார்ச் அடித்துத் தேடிப்பார்க்கிறோம்.

நெடுநேரம் தேடியபிறகு, அந்தப் பல்பொடிப் பொட்டலம் கிடைத்துவிடுகிறது. 'ஆஹா!' என்று குஷியாகத் திரும்பிப் பார்த்தால், நம்மிடம் எப்போதோ பல்பொடி கேட்டவர், நரைத்துக் கிழப் பருவமெய்தி பல்லெல்லாம் விழுந்து பொக்கை வாயோடு சிரித்துக்கொண்டிருப்பார். அதன்பிறகு அவருக்குப் பல்பொடியோ, பேஸ்டோ தேவைப்படாது.

அப்படியானால், நம்மிடம் என்ன தப்பு? பயோரியா பல் பொடியை நம்மால் ஏன் உடனடியாகக் கண்டுபிடிக்க முடிய வில்லை?

இந்தக் கேள்விக்குச் சுருக்கமாக ஒரே வாக்கியத்தில் பதில் வேண்டுமானால், 'பல்பொடி எங்கே இருக்கும் என்று நமக்குத் தெரியவில்லை!' என்று சொல்லிவிடலாம்,


Cont...4

## கவிதைகள்

### தன்னம்பிக்கை



கட்டுடல் மேனியனும்
கட்டிலில் சோர்ந்துரங்க
ஒரு கால் வெட்டுண்ட போதினிலும்
உழைப்பில் மட்டுமே என் கவனம்
உடலால் ஊனம் நான் இங்கே
என்றும் உள்ளத்தில் ஊனமென்பது இல்லை
தன்னம்பிக்கை ஒன்று மட்டும் போதும்
தரணியெங்கும் உன்பெயரது வாழும்...

Compiled by : Mr. C. Suresh
Production

### உனக்கு வெற்றி வேண்டுமா?

உனக்கு வெற்றி வேண்டுமானால்
இறந்த காலத்தை உனது நிகழ் காலமாக விடாதே,
உனது நிகழ்காலத்தை உனது எதிர்காலமாக விடாதே,
நிகழ்காலத்தில் நிகழ்வதை நிகழ விடு,
மனம் தளராமல் போராடு,
தோல்வியை நினைத்து அஞ்சாதே,
வெற்றியை நினைத்து தலைக்கனம் அடையாதே,
கடமையை மட்டும் செய்
பலனை ஆண்டவனிடம் விடு,
வெற்றி நிச்சயம் உனக்கே.

Compiled by : Mr. V. Kumar
Purchase

### லட்சியப்பாதை



லட்சியமெனும் காற்றில்தான்
மனித உயிர்மூச்சே வாழ்கிறது
லட்சியமெனும் வானில்தான்
புதிய விடியலே பிறக்கிறது.
லட்சியமெனும் விதையில்தான்
வாழ்வெனும் பயிரே தழைக்கிறது.
இளைஞனே! லட்சியமெனும் புதையல்
உனக்குள் புதைந்து கிடக்கிறது.
அது இனி ஒரு நாளில்
புதுமைகளாக வெளிவரும்.
லட்சிய பாதையில் வரும் தடைகளை
தவிர்த்துவிட்டால் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

Compiled by : Mrs. C. Bhavani
Receptionist

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

கவனியுங்கள்! 'பல்பொடி எங்கே இருக்கிறது?' என்பது கூட இரண்டாம்பட்சம்தான். 'பல்பொடி எங்கே இருக்கும்? அதாவது எங்கே இருக்கக்கூடும்?' என்பதைத் தெரிந்து வைத்திருப்பதுதான் முக்கியம்.

ஒரு மளிகைக்கடையில் ஆயிரம்விதமான பொருள்கள் இருக்கும். அவை எல்லாவற்றையும் ஒருவர் துல்லியமாக நினைவில் வைத்துக்கொள்வது சாத்தியமே இல்லை. ஆனால், வேறு சில தந்திரங்களை ஒழுங்காகக் கையாண்டால், 'பல்பொடி எங்கே இருக்கக்கூடும்?' என்று ஓரளவு சரியாகக் கணித்து விடலாம்.

அதாவது, இருக்கிற முப்பத்துச் சொச்ச ஷெல்ஃப்களில், இந்தப் பகுதியில்தான் பல்பொடி, பேஸ்ட், பிரஷ் வகையறாக்கள் இருக்கும் என்று நமக்குக் குத்துமதிப்பாகத் தெரிந்தால் கூட போதும். இருபது இடங்களில் தேடாமல், ஒன்றிரண்டு இடத்தில் மட்டும் தீவிரமாகத் தேடலாம்.

ஆனால், இந்தத் தந்திரம் பலிக்க வேண்டுமானால் அதற்கு நாம் வேறொரு முன்னேற்பாட்டைச் செய்திருக்க வேண்டும். நமது கடையில் விற்பனைக்கு வருகிற எல்லாப் பொருள்களையும் திசைக்கு ஒன்றாக விசிறியடிக்காமல், அவற்றின் பயன்பாடு, விலை, விற்கும் வேகம் போன்றவற்றின் அடிப்படையில் ஒழுங்காகப் பிரித்து வைத்திருக்க வேண்டும்.

அப்படியில்லாமல், கோல்கேட் ஒரு மூலையில், பயோரியா இன்னொரு மூலையில் என்று மனம்போன போக்கில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தால், ஒரு கட்டத்தில் எந்த மூலையில் எது கிடக்கிறது என்று நமக்கே தெரியாது.

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான், ஸ்பானரை கிரீஸ் டப்பாவுக்குக் கீழே 'மறந்துபோய்' வைத்து விடுகிறார்கள், அதன்பிறகு, ஓர் அவசரத்துக்கு வேண்டும் என்று தேடும் போது, அந்த அழுக்கு டப்பாவுக்குப் பக்கத்தில் தேட வேண்டும் என்று யாருக்குத் தோன்றும்?

மளிகைக்கடை அண்ணாச்சியின் அனுபவ அறிவு அந்தத் தொழிற்சாலையின் அதிகாரிகளுக்கு இருந்திருந்தால், ஸ்பேனர்களும் திருகாணிகளும் இப்படிக் கண்ட இடத்தில் கிடக்குமா? பன்னிரண்டு நிமிஷங்கள் வேலை தடைப்பட்டிருக்குமா? நஷ்டம் ஏற்பட்டிருக்குமா?

இந்த விஷயத்தில் நமக்கு உதவுவதற்காக, ஜப்பானிலிருந்து ஐந்து சித்திரக் குள்ளர்கள் வந்திருக்கிறார்கள்.

தொடரும்...

## *9th STAFF DAY CELEBRATION*

